திரு. எம். தேவராசன்: மக்கள் பெருக்கத்தைவிட ஏர் பொல்யூஷன் எதிர்காலத்தில் மிகுந்த துன்பம் விளைவிக்கும் என்று கூறுகிறார்கள். அதைக் கருத்தில் கொண்டு வாரத்துக்கு ஒரு நாள் எந்த ஒரு வண்டி வாகனமும் நகரில் ஓடக்கூடாது என்ற உத்தரவை அரசு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அந்த அவசியம் ஏர் பொல்யூஷன் காரணமாக மட்டும் ஏற்படவில்லை. பெட்ரோல் கிடைக்காத நெருக்கடியான நேரத்தில் மத்திய அரசு அந்த அளவுக்கு ஒரு முறையை கையாள்வதன் மூலம் சமாளிக்க முயற்சிக்கும் என்ற எண்ணம் இருக்கிறது. இதனால் மக்கள் பெருக்கத்தைவிட அதிகமான கஷ்டம் ஏற்படும் என்று யாரும் கருதத் தேவையில்லை. இதனால் ஏற்படும் கஷ்டம், நெருக்கடி, மூச்சு விட்டால் அதில் கெடுதல் ஏற்படும். ஆனால், மக்கள் தொகை அளவுக்கு மீறினால் மூச்சே விடமுடியாத நிலை ஏற்படும்.

மாயூரத்தில் குடிநீர் வழங்கு திட்டம்.

*128 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் குடிதண்ணீர் திட்டத்தினை விரிவுபடுத்த அந்நகராட்சி கடன் தொகை ஏதேனும் கோரியுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாயூரம் நகராட்சி எல்லைக்குள், குடிநீர் வழங்கப்படாத பகுதிகளுக்கு குடிநீர் முதன்மைக் குழாய்களை அமைப்பதற்காக ரூ. 4 இலட்சம் கடன் வழங்குமாறு கேட்டு 1971 ஜூலையில் அந்த நகராட்சி விண்ணப்பித்தது. ஆனால் அப்போது மாயூரம் குடிநீர் வழங்கு திட்டத்தை நீட்டிப்பதற்காக அரசால் ஏற்பளிக்கப்பட்ட செயற்குறிப்பு எதுவும் இல்லை. எனவே, அப்போது அக்கடன் தொகையை வழங்க தமிழ்நாடு குடிநீர் வழங்கு கழிவுநீர் அகற்று வாரியம் பரிவுரைக்கவில்லை. அந்நிலை குறித்து அந்நகராட்சிக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது மாயூரம் நகராட்சி எல்லைக்குள் குடிநீர் வழங்கப் படாத பகுதிகளுக்கு 18 மீட்டர் குடிநீர் பங்கீட்டு முதன்மைக் குழாய்களை ரூ 9.4 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்று தமிழ்நாடு குடிநீர் வழங்கு கழிவுநீர் அகற்று வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. இது குறித்து

1974 சனவரி 24]

மாயூரம் நகராட்சி ஆணையாளருடன் கடிதத் தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது. இந்த வரைவுச் செயற்குறிப்பை ஆய்வு செய்த பின்னர் அரசின் நிர்வாக ஒப்பளிப்பை பெறுவதற்காக அதனை தமிழ்நாடு குடிநீர் வழங்கு கழிவுநீர் அகற்று வாரியம் அனுப்பிவைக்கும். வரைவு செயற்குறிப்புக்கு அரசு அனுமதி வழங்கிய பின்னர் அரசுக்கடன் வேண்டி அந்த நகராட்சி விண்ணப்பிக்குமானால் அப்போது அது பரிசீலனை செய்யப்படும்.

திருப்புவனம் ஒன்றியத்தில் குடிநீர் திட்டங்கள்.

*129 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் குடிதண்ணீர் வாரியத்தின் மூலமாக 1973-74-க்கு எத்தனை கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படுவதாக உள்ளது?

(இ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் 1973-74-ல் குடிநீர் வழங்கப்பட உள்ள கிராமங்கள் எண்ணிக்கை 13.

(இ) மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.560 லட்சம்.

(முற்பகல் 9-30)

திரு. த. சோனையா: தலைவர் அவர்களே, இந்த திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொடுக்கிறபோது முதலிலே எந்த எந்த கிராமங்களில் குடிக்கத் தண்ணீர் இல்லையோ அவற்றுக்கு முதலில் கொடுக்கவேண்டும், அப்படியின்றி ஏற்கனவே குடிக்கத் தண்ணீர் வசதியுள்ள கிராமங்களுக்கே பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி அளிக்கிறார்கள், அப்படியின்றி இனி ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைக் கலந்து கொண்டு, குடிதண்ணீர் வசதியற்ற எந்த எந்த கிராமங்களுக்கு முதலில் குடிதண்ணீர் வசதி அளிப்பது என்பதை நிர்ணயிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்தப் பட்டியல் தயாரித்த போது அந்தப் பட்டியலில் உள்ள கிராமங்கள் எல்லாவற்றுக்குமே உதவுவதாக மத்திய அரசு அறிவித்திருந்த காரணத்தினால் ஏறத்